கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

STC No. 51/2023

நாள்.05.03 .2026 ம.சா.1 திரு.வேல்வினோத்

த/பெ திரு.மாணிக்கம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பால் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) நான் வங்கியில் பணிபுரிவதால் காசோலை பற்றிய விவரம் நன்கு தெரியும் என்றால் சரிதான்.ம.சா.ஆ.1 எதிரி கொடுத்ததாக சொல்லியுள்ள அந்த காசோலையில் குறுக்கு கோடிடபடவில்லை என்றால் சரிதான். குறுக்கு கோடிடபடவில்லை என்றால் காசோலையை வங்கியில் நேரடியாக கொடுத்து பணத்தை பெற்று கொள்ளலாம் என்றால் சரிதான். ம.சா.ஆ.1 காசோலையை வடக்கன்குளம் SBI வங்கியில் கொடுத்து பணம் உள்ளதா வங்கி கணக்கு யார் பெயரில் உள்ளது என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 காசோலையின் பின் "Name variation certified" என மேலேழுத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ம.சா.ஆ.1 காசேலையின்அடிப்படையில் தான் ம.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி மேலேழுத்து விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், காசோலை திருப்பப்பட்ட பின்புதான் மேலேழுத்து விவரம் எனக்கு தெரிய வந்தது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 காசோலையில் உள்ள வங்கி கணக்கு யார் பெயரில் உள்ளது என்ற விவரத்தை வங்கியில் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

2) ம.சா.ஆ.1 காசோலையில் உள்ள வங்கி கணக்கு எதிரி உடையது இல்லை என்ற விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் ம.சா.ஆ.6 வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பப்பட்டபோது தான் மேற்படி விவரம் எனக்கு தெரிய வந்தது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.6 அறிவிப்பு திருப்பப்பட்ட பதிவு தபாலில் " இந்த நிறுவனத்தின் உரிமையாளர் குலசை பிரியா ஆவார் C/o.வேறு நபர் என்பதால் நிறுவனத்தின் உரிமையாளர் தபால் வாங்க மறுத்துவிட்டார்" என மேலேழுத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ம.சா.ஆ.6 அறிவிப்பு திருப்பப்பட்ட பதிவு தபாலில் உள்ள மேற்படி மேலெழுத்து மூலம் தான் 2ம் எதிரியின் காசோலை இல்லை என்ற விவரம் தெரிய வந்தது என்றால் சரிதான். மேற்படி விவரம் தெரிய வந்த பிறகு SBI வங்கியில் வங்கி கணக்கு யார் பெயரில் உள்ளது என்ற விவரத்தை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் கேட்டேன் ஆனால் சொல்ல மறுத்து விட்டார்கள். நான் காசோலையை உடன் தகவல் கேட்டு இருந்தால் வங்கியில் விவரம்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.03.05 13:46:52 +0530

சொல்லியிருப்பார்கள் என்றால் சரியல்ல, மூன்றாம் நபருக்கு விவரங்கள் சொல்லமாட்டாகள். இவ்வழக்கிற்கும், இவ்வழக்கு எதிரிக்கு எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும், 1ம் எதிரியான நிறுவனத்திற்கும், 2ம் எதிரிக்கு எந்தவித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல. 2ம் எதிரி பெயரில் வழக்கு வங்கி காசோலை கிடையாது என்றால் சரியல்ல. 2ம் எதிரி எக்காலத்திலும் என்னிடம் கடன் பெற்றது கிடையாது என்றாலும், அதை திருப்பி அளிக்க காசோலை வழங்கியது இல்லை என்றாலும் சரியல்ல. நான் வார வட்டிக்கு பணம் கொடுக்கும் நபர் என்றால் சரியல்ல. எதிரிக்கு வேண்டாத நபர்களின் துண்டுதலின்பேரில், இவ்வழக்கு 2ம் எதிரி உடைய வங்கி கணக்கே இல்லாத காசோலையை அவர் வழங்கியதாக கூறி, அவருக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்புடையதாக கூறி இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கு தொடர்பு இல்லாதா காசோலை என்பதால் விசாரணைக்கு ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. 3ம் நபரின் துண்டுதலின்பேரில் தாக்கல் செய்து எதிரியை பழிவாங்கி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பில் ம.சா.ஆ.1காசோலையின் பின் வங்கி கிளை மேலாளர் "Name variation certified"என மேலேழுத்து செய்ததை மறைத்து அறிவிப்பு தாக்கல் செய்து அதன்பேரில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 2ம் எதிரி விடுதலை செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ம.சா.1 குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை** - இல்லை.

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.03.05 13:46:56 +0530